ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1794/11 - 2013 ජනවාරි මස 22 වැනි අඟහරුවාදා - 2013.01.22

*1794/11 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**புகையிலைத் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் புகையிலைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, இவ் அறிவித்தலினகத்தேயுள்ள அவ்வட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளவாறான தீர்மானங்கள் கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத்தீர்மானங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு 5,
*2013, சனவரி 15.*

**அட்டவணை**

*புகையிலைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1966 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதியன்று வெளிவந்த 14629/6 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறாக 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 அந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள தீர்மானங்கள் மேலும் பின்வருமாறு வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

பாகம் II

*சாதாரண வேலை நாளொன்றிற்கான ஊழியரொருவருக்கு (ஆண்/பெண்) கொடுபட வேண்டிய ஆகக் குறைந்த நாட் சம்பளம்– 500.00 ரூபா.*

*2 - 242*

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் கௌரவ தொழில் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்டு 2000 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிய 1120/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான கட்டளை மூலம் தொழில் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ் ஆரம்பப் பாடசாலை சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், உதவியாளர்கள் தொடர்பாக இதனுடன் உள்ள அட்டவணையிற் காணப்படும் ஆகக்குறைந்த சம்பள அளவு தொடர்பான தீர்மானம், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக்கட்டளைச் சட்டத்தின் 33 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானம் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு 05,
2013, சனவரி 15.

#### அட்டவணை

தொழில் ஆணையாளரினால் ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில் தொடர்பாக ஆசிரியர்கள், உதவியாளர்களுடைய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பளம் தொடர்பாக 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1138/29 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவற்றை காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளனவும் இறுதியாக 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1656/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வேறுபடுத்தப்பட்டுள்ளனவுமான இத்தீர்மானங்களுக்குப் பதிலாக பின்வரும் அட்டவணையைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

| முதலாவது நிரல் (பிரதேசம்) | இரண்டாவது நிரல் (தொழில்) | மூன்றாவது நிரல் (ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம்) |
|---|---|---|
| | | ரூபா. ச |
| மாநகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | 9,750.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | 7,500.00 |
| நகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | 8,740.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | 6,975.00 |
| பிரதேச சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | 7,050.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | 5,740.00 |

மேலே (ஆ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளும் மேலே (அ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளுடன் தொடர்புடைய தற்காலிக அல்லது வேறு யாதாயினும் சேவைகள் இருப்பின் அவைகளும் இதில் அடங்கும்.

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழில்

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 1979 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி 58 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் மூலம் தொழில் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொடர்பாக இதனுடன் உள்ள அட்டவணையிற் காணப்படும் நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள அளவு தொடர்பான தீர்மானம், கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 33 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத்தீர்மானங்கள், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருவனவாகும்.*

டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

கொழும்பு 5.
2013, சனவரி 15.

### அட்டவணை

தொழில் ஆணையாளரால் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நேரவேலைக்கான ஆகக்குறைந்த வேதனத்திற்காக 1980ஆம் ஆண்டு யூன் மாதம் 26ஆந் திகதிய 94/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும் கடைசியாக 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிய 1656/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் வேறுபடுத்தப்பட்டதுமான தீர்மானங்கள் அவ்வட்டவணைக்குப் பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும் :-

I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவர்களான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலிலுள்ள தொழிலாளர்களுக்குப் பொருத்தமான நேரவேலைக்கான ஆக்ககுறைந்த சம்பள வீதங்கள் அதற்கெதிராக II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட் டுள்ளவாறிருத்தல் வேண்டும்.

| | நிரல் I<br>தொழிலாளர் வகுப்பு | நிரல் II<br>சாதாரண வேலைநாள் ஒன்றிற்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதம்<br>ரூ. ச. |
|---|---|---|
| (அ) | ஊதலுருவம் செய்வோர், இயந்திரங்கள் இயக்குவோர் | 510.00 |
| (ஆ) | இயந்திரங்கள் இயக்குவோருக்கு உதவுவோர், குமிழ் உருவம் செய்வோர், வெட்டுவோர், ஊதலுருவம் செய்வோருக்கு உதவுவோரும் சூளையாளருக்கு உதவுவோரும் | 450.00 |
| (இ) | உருக்கி மட்டஞ்செய்வோர், வாயு செலுத்துவோர், அழுத்துநர், குமிழ் உருவம் செய்வோருக்கு உதவுவோர் | 427.50 |
| (ஈ) | கனிஷ்ட குமிழ் உருவம் செய்வோர், உருவத்தினை சமநிலை செய்வோர், கடைச்சற்காரர், எண்ணுவோர் | 412.50 |
| (உ) | கண்ணாடி வெட்டுவோர், சிமினி வெட்டுவோர், மட்டமாக்குவோர் | 397.50 |
| (ஊ) | அடுக்கிக் கட்டுவோர், கொண்டுசெல்வோர் | 375.00 |

### சாதாரண வேலை நாள்

சாதாரண வேலை நாள் ஒன்றில் அடங்கியிருக்கும் மணித்தியாலங்கள் (உணவுக்கான அல்லது ஓய்வுக்கான மணித்தியாலம் ஒன்று உட்பட)

| | | |
|---|---|---|
| (அ) | சனிக்கிழமை தவிர்ந்த பிற நாட்களில் | 9 மணித்தியாலங்கள் |
| (ஆ) | சனிக்கிழமை நாட்களில் | 6 மணித்தியாலங்கள் |

2-244

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.